**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை**

**தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

(18.02.2023 முதல் 22.02.2023)

அறிக்கைஎண்: 14/2023 தேதி: 17.02.2023

**தஞ்சாவூர்மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 21 – 22 °செ ஆகவும் பதிவானது.

**தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (18.02.2023 முதல் 22.02.2023).**

| கடந்தவாரவானிலை (14.02.2023 முதல் 16.02.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (18.02.2023 முதல் 22.02.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 14/02 | நாள்-2 15/02 | நாள்-3 16/02 | தேதி | நாள்-1 18/02 | நாள்-2 19/02 | நாள்-3 20/02 | நாள்-4 21/02 | நாள்-5 22/02 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 32 | 33 | 33 | 34 |
| 21 | 22 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 23 | 23 | 23 |
| 5 | 4 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 70-64 | 70-63 | 69-66 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-50 | 90-50 | 90-50 | 90-50 | 80-40 |
| 4 | 5 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 6 | 6 | 8 | 8 |
| கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு | கிழக்கு | வடக்கு | வட வட கிழக்கு |

**தஞ்சாவூர் மாவட்டத்திற்கானவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் குறைந்த மேகமூட்டத்துடன் காணப்படும். 18.02.2023 முதல் 22.02.2023 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 32 – 34 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 – 23 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 – 8 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | அறுவடை | வறண்ட வானிலையை பயன்படுத்தி நெல் ஈரப்பதம் காய்ந்தவுடன் நெல் வயல்களை அறுவடை செய்யவும். |
| பயறு வகைகள் | விதைப்பு | நெல் அறுவடை செய்த தரிசு நிலங்களில் உளுந்து மற்றும் பச்சைப்பயிறு விதைக்கவும். |
| பயறு வகைகள் | விதைப்பு | ஒரு கிலோ பயறு விதைக்கு பியூவேரியானா பேசியானாவை 10 கிராம் என்ற வீதத்தில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இரவு நேரங்களில் கொட்டகைகளில் வெப்ப மூட்டிகளை பயன்படுத்தவும். |

## குறுஞ்செய்தி

வறண்ட வானிலையை பயன்படுத்தி நெல் வயல்களை அறுவடை செய்யவும்.

**இயக்குநர்**